
மினி
லயன்
துப்பாக்கி முனையில்...
ஆசிரியர்: S. விஜயன்
முழுநீளச் சித்திரக்கதை!


டெக்ஸ் வில்லர் தோன்றும்
பழி வாங்கும் பாவை
ரூ 2/-
லயன் காமிக்ஸ்
விற்பனையாகிறது!


துப்பாக்கி முனையில்...
POLICE
இன்று காலை 10 மணிக்கு 50,000 டாலர்கள் வந்து சேர வேண்டும். இல்லையேல் சரியாக மதியம் 12 மணிக்கு நகர் கலைக்கூடம் தரைமட்டமாக்கப்படும்.
POLICE
போலீஸாரை வந்தடைந்த அந்த எச்சரிக்கைக் குறிப்பு, விஷமிகளின் உண்மையான அச்சுறுத்தலா அல்லது போக்கிரி ஒருவனின் பொறுப்பற்ற பிதற்றலா...?—தீர்மானிக்க முடியவில்லை.


சைரன் ஒலி எழுப்பியவாறு வீதிகளில் விரைந்த போலீஸ் வேன்களும் கார்-களும், கலைக்கூடத்தின் வாசலில் கிறீச்சிட்டு நின்றன...
LY
AR
துப்பறியும் நிபுணர் ஜோன்ஸ் தன் மேலதி-காரி விடுத்த உத்தரவைக் கேட்டு கேலி-யாக தனக்குள் சிரித்தார்..
ஜோன்ஸ், நீயும் மெல்வில்லியும் இங்கே உள்ளே நடக்கும் சோதனையை கண்காணியுங்கள் நான் போய் சுற்று வட்டாரத்-திலிருப்பவர்களை உடனே அப்புறப் படுத்தும் ஏற்பாட்டை கவனிக்கிறேன்.
விவரமான ஆள்தான்... வெளியே இருந்து கொள்வதுதான் பாது-காப்பானது என்று எண்ணுகிறார் போலும்!


வெடிகுண்டு எங்கேயாவது ஒளித்து வைக்கப்பட்டி-ருக்கிறதா என்று தீவிரமாக தேடப்பட்டது...
மேல்மாடி முழுவ-தும் அங்குலம்அங்-குலமாக தேடி சலித்-தாயிற்று ..வெடி-குண்டு ஏதும் அகப்-படவில்லை.
கீழ் தளத்திலும் சோதனை போட் டாயிற்று இங்கே-யும் வெடிகுண்டு இல்லை-வா... போய் இன்ஸ் பெக்டரிடம் தெரிவிப்போம்!
தேடாத இடம் பாக்கியில்லை ஸார்...உள்ளே வெடிகுண்டு இல்லை என்று நூற்றுக்கு நூறு உறுதியாக சொல்ல முடியும்
நல்லது...! ஆனாலும், கெடு தாண்டும்வரை நாம் இங்கே இருந்துவிட்டுப் போகலாம்.
கட்டிடத்திலிருந்து சற்றுத் தொலைவில் நின்றவாறு, டவுன் ஹால் கடிகாரத்தின் மீது கண்ணைக் காத்துக் கிடந்தனர்—


சரியாக பன்னிரண்டு மணிக்கு—
டமார்
அது என்ன விபரீதம்?
ICE
சோதனை போட்டு என்ன கிழித்தீர்கள்...? இதற்கு நீ தக்க சமாதானம் சொல்ல வேண்டியிருக்கும்... ஜோன்ஸ்!
பயங்கர ஓசையோடு கட்டிடத்தின் மேற்கூரை தகர்க்கப்பட்டதையடுத்து. அங்கே குழுமியிருந்தோர் மிரண்டு ஓட்டம் பிடித்தனர்...
ஆனால்— வந்து...



ஊருக்கு வெளியே சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் —இரண்டு ஆசாமி-கள் வெற்றிச் சிரிப்பு சிரித்தனர்...
வேலை கச்சித-மாக முடிந்து விட்டது...!
சரியாக இலக்கை குறிவைத்து அடி-த்து வட்டாய் பாங்க்ஸ்.. பலே!
சரி... புறப்படுவோமா?
இந்த மார்ட்டர் பீரங்கியை வேண்டாத பொருள் போல் இப்படியே இங்கே விட்டுச் செல்ல எனக்கு மனம் ஒப்பவில்லை...!
பாஸ்ஸோட உத்தரவு அப்படி —நாம் மீற முடியுமா...?
இருவரும் காத்துக் கொண்டிருந்த டிரக்கினுள் ஏறி அமர்ந்ததும், அது கிளம்பியது...
இந்த நாட கத்தினால் என்ன லாபம் நமக்கு?
உடனடியாக ஏதுமில்லைதான் ஆனால் நம் வலி மையை பறை-சாற்ற இது ஒரு நிரூபணம்.


பிற்பகல் வேளையில்ஜோன்ஸ்மீது சரமாரியாக வந்து விழுந்தன குற்றச்சாட்டுகள்!
மில்லியன் பவுண்டுகள் பெறுமானமுள்ள சித்திரங்கள் நாசமாகிப் போய்விட்டன...கமிஷனர் ஏகமாக கோபித்துக் கொண்டார்... அனைத்துக்கும் நீதான் காரணம்...
இன்னமும் நான் உறுதியாக சொல்வேன்... கட்டிடத்தினுள் வெடிகுண்டு இருந்திருக்கவே முடியாது! இதில் வேறு ஏதோ இரகசியம் ஒளிந்திருக்கிறது ..ஸார்!
இன்ஸ்பெக்டர் லீ சீறினார்.!.
ஆமாம் இப்படி ஏதாவது சப்பைக் கட்டு கூறு—வா மெல்வில்லி... என்ன விஷயம்?
அந்த வெடிவிபத்து பற்றிய குற்றவியல் அறிக்கையில் கொஞ்சமும் நம்ப முடியாத உண்மை வெளியாகி இருக்கிறது... ஸார்!


நவீன மார்ட்டர் வகை பீரங்கியிலிருந்து வெளிப்பட்ட வெடிகுண்டு நாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது...
அதாவது, சுமார் ஒருமைல் தொலைவில் இருந்து கொண்டு பீரங்கியை இயக்கி இதனை நிகழ்த்தியிருக்க முடியும் இல்லையா?
அநியாயமாக குற்றம் சாட்டியதற்காக. மன்னிப்பு கோரும் பெருந்தன்மை இன்ஸ்பெக்டர் லீயிடம் இல்லை—
சமீபத்தில் ஏதாவது ஆயுதம் காணாமற் போனதா? யாரேனும் இராணுவத்திலிருந்து ஓடிப் போய் விட்டார்களா-என்பது போன்ற விபரங்களை இராணுவ முகாமில் விசாரி!
அடுத்த முப்பதாவது நிமிடம்... அருகே இருந்த இராணுவ டெப்போவில் இருந்தார் ஜோன்ஸ்!
ஓ... துப்பறியும் சார்ஜண்ட் ஜோன்ஸா? நான் லெப்டினெண்ட் மாஸ்டர்ஸ்- சொல்லுங்கள்— என்ன உதவி வேண்டும் உங்களுக்கு?
நான்கு அங்குல மார்டர் வகை பீரங்கி பற்றி முழு விபரம் தேவை. அதன் சக்தி, எடை, திறன்... இப்படியாக!


நகர்த்தவே இரண்டு பேர் வேண்டும் —இல்லையா?
சுமார் மூன்றுகிலோ தூரத்துக்கு குண்டு-களை அனுப்பும் திறன் கொண்டது... இதை இயக்க ஒரு நபர் போதும், ஆனால், எடை சுமார் 300கிலோ இருக்கும்!
இதை பயன்படுத்தி, ஒரே முயற்சி-யில் இலக்கை சரியாக குறி வைத்து அடிக்கும் திறமை இங்கே எத்தனை பேருக்கு இருக்கும்?
விரல்விட்டு எண்ணிவிடலாம்!
சார்ஜண்ட் ப்ரையண்ட், மான் ஹில்—கார்ப்பொரல் ஜென்கின்ஸ்,—பாங்க்ஸ் என்றொருஆசாமி ...ஆனால் அவன் சமீபத்தில் விலகிச் சென்று விட்டான்—ம்ம்... இன்னும் யாரெல்லாம்...?
MP


கிடைத்த தகவல்களை குறித்துக் கொண்டு ஜோன்ஸ் வெளியே வந்தபோது —
ரேடியோவில் ஏதோ தகவல் வருகிறது ஸார்...


இன்ஸ்பெக்டர் லீ தான் பேசினார்...
உடனடியாக திரும்பிவா... ஜோன்ஸி—இன்னொரு அச்சுறுத்தல் வந்து தொலைத்திருக்கிறது!
இதோ புறப்பட்டுவிட்டேன், இன்ஸ்பெக்டர்!


இதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணத்தைக் கொண்டுபோய்கொடுப்பதாக இல்லை!
அந்த பாங்க்கைச் சுற்றிலும் நான் செய்ய உத்தேசித்திருக்கும் பாதுகாப்பு வளையத்தை, ஒரு சுண்டெலி கூட ஊடுருவ முடியாது...
சவால் விட்டிருப்பவன் சாதாரண பாங்க் திருடன் இல்லை... இன்ஸ்பெக்டர்! ரொம்பவும் புதிரான முறையில் இருக்கின்றன... இவனுடைய நடவடிக்கைகள்!
ஜோன்ஸின்எச்சரிக்கை அலட்சியம் செய்யப்பட்டது. மறுநாள்... அத்தனை போலீஸாரையும் பாங்க் அருகே காணமுடிந்தது!
அப்பப்பா... எத்தனை ஆர்ப்பாட்டம்!
மிரட்டல், பொய்யோ... நிஜமோ?
POLICE


பாங்க் உள்ளேயும் பரபரப்பாக கிடந்தது—
அவரவர் இலக்கில் நின்று மிகுந்த எச்சரிக்கையோடு நடந்து கொள்ளுங்கள்... தவறு நேரிட்டு விடக்கூடாது! கோட்டை விட்டீர்களோ... தொலைந்தீர்கள்— அத்தோடு!


நேரம் செல்லச் செல்ல பரபரப்பு அதிகரித்துக்கொண்டே போனது...
POLICE
இராணுவத்தை உதவிக்கு அழைத்திருக்கிறார்களா... என்ன? அங்கே... பார்!


செஞ்சுரியன் டாங்க் ஒன்று அங்கே வந்து கொண்டிருந்தது...
இத்தனை அலட்டல் தேவைதானா...?
நமக்கு உதவ டாங்க் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்கள்... பார்!
நெருங்கி வந்துவிட்ட பின்னரும், அந்த முரட்டு வாகனம் நிற்காமல் தொடர்ந்து முன்னேறியது!
...ஹே... என்ன இது கண்மூடித்-தனமாக—
டமால்!



கூடுதல் வேகத்தோடு பாங்க் கட்டிடத்தை நோக்கி வந்தது அந்த டாங்க்—அப்போது மணி...சரியாக பன்னிரண்டு...!
இது ஒன்றும் சரியாகப்பட-வில்லையே...!




காவல் நின்ற போலீஸார் உயிர் பிழைக்க சிதறி ஓடினர்...
ஹ்ராம்..
CITY BANK
ஆ ஹ்ர ..!


பாங்க் கட்டிடத்தின் மீது போய் டாங்க் மோதி-யதும் பாங்க் சுவர் தகர்ந்து விழுந்தது...
டம்-டமால்!
எ...எதிரிகளின் விஷமம் இது—


முதலில் சுதாரித்துக் கொண்டவர் ஜோன்ஸ்தான் ஓடிச் சென்று டாங்க்கின் மீது தொற்றி ஏறினார்...


மூடியை அவர் திறந்ததும், முகத்திரையிட்ட ஓர் உருவம் வெளிப்பட்டது...
அசையாதே... அப்படியே நில் ...இல்லையேல், சுட்டுத் தள்ளி விடுவேன் ... ஜாக்கிரதை!


ஆனால்... அப்போது கேட்ட இயந்திர துப்பாக்கி-யின் இடிமுழக்கம் ஜோன்ஸின் மிரட்டலை அர்த்தமற்றதாக்கி விட்டது!
ஆவ்..!


புரிந்து கொண்டாயல்லவா... இதற்கு மேலும்நீஇங்கே நின்று மிரட்டிக் கொண்டிருந்தாயானால் அனைத்தையும் தரைமட்டமாக்கி விட்டுத்தான் போவோம்... இந்த இடம் சுடுகாடாகிப் போகும்!
ஆத்திரத்தில் பற்களை நறநறவென்று கடித்தவாறு வேறுவழியின்றி கீழே இறங்கிக் கொண்டார் ஜோன்ஸ்அந்த முகமூடி மனிதன் காட்டுக் கத்தலாக உத்தரவிட்டான்...
ஏய்... நீதானே பாங்க் மானேஜர்? ஐம்பதினாயிரம் பவுண்டுகளை ஒரு பையில் போட்டு இப்படிக் கொண்டு வா...
எதிர்த்துப் பேச யாருக்குமே துணிச்சல் இல்லை.
எண்ணிக்கை சரியாக இருக்குமில்லையா? குறைந்தால் மறுபடியும் வருவோம்!
வவ வந்து... அதில்ஐம்பதினாயிரத்துக்கும் சற்று கூகூ கூடுதலாகத்தான் இருக்கிறது...!


மூடி மூடிக்கொண்டது...டாங்க் திரும்பி, தன் பயணத்தை தொடங்கியது
சே...தட்டிக் கேட்க நாதியில்லை!
அவர்களுடைய கை ஓங்கி விட்-டது...சும்மா நின்று வேடிக்-கை பார்ப்பதை தவிரவேறுஎன்ன செய்ய முடியும்?


வெளியே—போலீஸ் கார்கள் டாங்க்கின் வழியை மறிக்க முற்பட்டன...
கிறீச்!
கிறீச்!


ஈடு இணையற்ற ஆற்றல் கொண்ட அந்த செஞ்சூரி-யன் டாங்க் ஒரு காரை தூக்கி எறிந்தது-இன்னொரு காரை நசுக்கி அப்பளமாக்கியது.
POLICE
POLICE


மூன்றாவது கார் அந்த டாங்க்கை பின்தொடர்ந்து சென்றது...
வடதிசையில் பெட்-ஒர்த் சதுக்கத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்-கள், எதிரிகள்... ஹலோ... டாங்க், வலப்புறமாக திரும்புகிறது...


300மீட்டர் தொலைவு முன்னால் சென்று கொண்டி-ருந்த அந்தடாங்க்கின்பீரங்கி ஒருமுறை முழங்கியது ...
பூம்!


ஆஹ்...!
POLICE


விரைவிலேயே சில உபயோகமான தகவல்கள் கிடைத்தன.
சார்ஜண்ட்கோர்பெட்... பாங்க்ஸ் இவர்கள் பற்றிய குறிப்பேடுகளை கோரி இராணுவ முகாமுக்கு செய்தி அனுப்பு ஹாரி...உருப்படியான தகவல் கிடைக்கக்கூடும்!
2-5-1.ரெஜிமெண்ட்டிலிருந்து வந்திருக்கிறது அந்த செஞ்சூரியன் டாங்க்...பரிசோதனை ஓட்டத்திற்காக அதை வெளியே எடுத்துச் சென்ற நபர்.. சார்ஜண்ட் கோர்பெட்!- ஆசாமி இன்னமும் முகாமுக்கு திரும்பி வந்து சேரவில்லையாம்!
வந்து சேர்ந்த குறிப்பேடுகளிலிருந்து கூடுதல் விபரங்கள் கிடைத்தன...
ஆக... பாங்க்ஸும் கோர்பெட்டும் ஒருவரையொருவர் நன்கு அதிவார்கள் ...இருவரும் முன்பு ஒரே யூனிட்டில் சிறிதுகாலம்இருந்திருக்கிறார்கள் ...
அப்போது அவர்களுக்கு மேலதிகாரியாக இருந்த நபரை தேடிக் கண்டுபிடித்தால் உபயோகமான தகவல் கிடைக்கலாம். நீ இவர்களுடைய வீட்டு முகவரிக்குச் சென்று அங்கே நிலவரம் எப்படி என்று பார்...


போலீஸ் தலைமையகத்தில்—
இருவர் இறந்துவிட்டனர்... நால்வருக்கு படுகாயம்... நம் கண்ணெதிரே பாங்க்கில் கொள்ளை நடந்திருக்கிறது.
இன்ஸ்பெக்டர் லீ... நீங்களும் உங்கள் சகாக்களும், இராணுவத்தின் கோணத்திலிருந்து சம்பவத்தை ஆராயுங்கள்... இரண்டு சம்பவங்களிலும் இராணுவம் சம்பந்தப்பட்ட விவகாரம் இருப்பது தற்செயலாக நிகழ்ந்துவிட்ட ஒற்றுமை என்று கொள்வதற்கில்லை...
யெஸ்.. ஸார்! அப்படியே செய்கிறோம் ஸார்!


விரைவிலேயே சில உபயோகமான தகவல்கள் கிடைத்தன.
சார்ஜண்ட்கோர்பெட்... பாங்க்ஸ் இவர்கள் பற்றிய குறிப்பேடு-களை கோரி இரா-ணுவ முகாமுக்கு செய்தி அனுப்பு ஹாரி... உருப்படி-யான தகவல் கிடைக்கக்கூடும்!
2-5-1. ரெஜிமெண்ட்டி-லிருந்து வந்திருக்கிறது அந்த செஞ்சுரியன் டாங்க்... பரிசோதனை ஓட்டத்திற்காக அதை வெளியே எடுத்துச் சென்ற நபர்.. சார்-ஜண்ட் கோர்பெட்!- ஆசாமி இன்னமும் முகாமுக்கு திரும்பி வந்து சேரவில்லையாம்!
வந்து சேர்ந்த குறிப்பேடுகளி-லிருந்து கூடுதல் விபரங்கள் கிடைத்தன...
அப்போது அவர்-களுக்கு மேலதிகாரி யாக இருந்த நபரை தேடிக் கண்டுபிடித்-தால் உபயோகமான தகவல் கிடைக்கலாம். நீ இவர்களு-டைய வீட்டு முகவரி-க்குச் சென்று அங்கே நிலவரம் எப்படி என்று பார்...
ஆக... பாங்க்ஸும் கோர்பெட்டும் ஒருவரையொருவர் நன்கு அறிவார்கள் ...இருவரும் முன்பு ஒரே யூனிட்டில் சிறிதுகாலம்இருந்-திருக்கிறார்கள் ...


விசாரித்ததில் அப்போதைய மேலதிகாரி கர்னல் கார்த் என்று தெரிய வந்தது ..
விரைவில்
துப்பறியும் நிபுணர் சார்ஜண்ட் ஜோன்ஸ் ஸார்! போன் செய்தேனல் லவா—
வாருங்கள் உள்ளே...!
டிரைவர், ஊருக்கு வெளியே உள்ள ஹாம்விச் கிராமத் தில் இருக்கிருராம் கார்த்! அங்கே போக வேண்டும்!
POLICE


கோர்பெட்-பாங்க்ஸ்...? ஆமாம், அவர்-களை நினைவிருக்-கிறது! பொதுவாக என் கீழ் வேலை செய்யும் அத்தனை நபர்களின் பெய-ரையும் தெரிந்து கொள்ள முயற்-சிப்பேன்-ஊழி-யர்களிடையே நல்-லெண்ணத்தை ஏற்படுத்த அது-உதவும் என்பதால்!


இரண்டு பேருமே சரியான போக்-
கிரிகள் — ஆனல் திறமையில் கில்-
லாடிகள்...பாங்க்ஸ்—பீரங்கிகளை
கையாளுவதில் சமர்த்தன்...
கோர்பெட்-
திறமையான
கீழ்நிலை அதி-
காரி.முன்னுக்கு
வரவேண்டும்
என்ற முயற்சி
யுடையவன்...
என்னிடம்
என்ன உதவி-
யை எதிர்-
பார்த்து
வந்திருக்-
கிறீர்கள்?-
நான் ஓய்வு
பெற்று விட்டது
தெரியுமில்லையா?


அவரை விசாரித்ததில் புதிதாக எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை...
WAR ROOM
அந்த அறை-உங்களுடைய பிரைவேட் மியூசியமா.. கர்னல்?
ஓய்வு பெற்றபின் பொழுதைக் கழிக்க எதையாவது செய்து கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது...


ஜோன்ஸ் குறிப்பிட்ட அறையின் கதவை திறந்தார் கர்னல்...
WAR ROOM
என் பொறுப்பிலிருந்த படைப்பிரிவு சம்பந்தப்பட்ட விபரங்களை 'மாடல்' செய்து வைத்திருக்கிறேன்...!பார்க்கிறீர்களா?


வரை படங்கள்...சாதனங்கள்...என்று, அனைத்-தும் முழு விபரங்களோடு இருந்தன
பிரான்சில நாங்-கள் ஊடுருவியது இந்த இடத்தில் தான்-அப்பப்பா ...எத்தனை உற்சாகமான நாட்கள் அவை!
மீண்டும் போலீஸ் தலைமையகத்-தில்...எவ்வித முன்னேற்றமும் இல்லாதது குறித்து, தன் அதிருப்தியை வெளியிட்டார் லீ-
இதைக்கூட துப்புத் துலக்கமுடியாத நீங்-களெல்லாம் துப்பறி-யும் நிபுணர்கள் என்று சொல்லிக் கொண்டு... சே...அவமானம்-
விமான நிலையங் களும், துறைமுகங் களும் கண்காணிக் கப் பட்டு வருவ தால் குற்றவாளி கள் நாட்டை விட்டு ஓட முடியாது சார்! சூடு தணியும் வரை புதிதாகவும் ஏதும் செய்ய மாட்-டார்கள்!
இரண்டு தினங்களுக்குப் பின்...
வின்செஸ்டருக்கு சுற்றுப் புறத்திற்கும் தண்ணீர் வழங்கும் இந்த நீர்த்தேக் கத்தின் கொள்ளளவு இருபதினாயிரம் மில்லியன் காலன் ஆகும்—


அந்த 'மாதிரி'யை சுற்றி நான்கு பேர் நின்று கொண்டிருந்தனர் ..
நம் அடுத்த தாக்கு-தலுக்கு மிகவும் பொருத்தமான இலக்கு இது...
''மில்லியன் பவுண்டுகளை உடனே அனுப்பி வையுங்கள்—இல்லையேல் நீர்த்தேக்கத்தை உடைத்து வின்செஸ்டரையும், அதை சுற்றியுள்ள கிராமங்களையும் ''மூழ்கடித்து'' விடுவோம்—என்பதாக நீர்த்தேக்கத்தை வசப்படுத்திக் கொண்டு, வெடி குண்டுகளை அடிப்பகுதியில் வைக்கிறோம்-பின்னர் மேயருக்கு மிரட்டல் கடிதம் அனுப்புகிறோம்...


முன்னாள்டாங்க்சார்ஜண்ட் கோர்பெட் கேட்டான்—
நீர்த்தேக்கத்தை வசப்படுத்த எத்தனை பேரோடுநாம் மோதவேண்டி வரும்... கர்னல்?
ஆறு பேர்கள்! திடீர் தாக்குதலும், நவீன ஆயுதங்களும் நமக்கு கூடுதல் பலமாகும்!
அடுத்து பாங்க்ஸ் தன் கருத்தை வெளியிட்டான்...
வெடிகுண்டை அங்கே பொருத்துவதில் நடைமுறை சிரமங்கள் இருக்கின்றன... கர்னல்!
அந்த நீர்த்தேக்கம் பற்றிய பொறியியல் வரைபடங்கள்... இதோ! எந்த சிரமமும் இராது!


இராணுவ நாட்களில் கர்னலுக்கு உதவியாளனாக இருந்து வந்த டக்கால் பேசலானான்....
ஒருவேளை பணம்வந்து சேர்ந்தால் நீர்த்தேக்கத்திலிருந்து நாம் எப்படி தப்பிவரமுடியும்?
சரியான கேள்வி! பாங்கிலிருந்து பறித்து வந்த பணத்தைக் கொண்டு நாம் வாங்கியிருக்கும் ஹெலிகாப்டரை பயன்படுத்தலாம்! ஆனால் அதை மட்டுமே நம்பிக்கொண்டிருக்கப் போவதில்லை நான்!
நம் 'எதிரி'களின் கவனத்தை திசை திருப்ப - பணம் வந்து சேர்ந்தாலும் கூட-வெடியை இயக்கி நீர்த்தேக்கத்தை தகர்த்து விடுவது என்று தீர்மானித்திருக்கிறேன்.
நகருக்கு வெளியே குன்றுப் பகுதியில் இருந்த அந்த நீர்த்தேக்கம் எப்போதுமே ஆள் நடமாட்டமின்றி அமைதியாக இருக்கும்!


நீர்த்தேக்கத்தின் இயக்கத்தை நிர்வகித்து வந்த ஊழியர்களில் இருவர், ஒருவேன் புழுதியை கிளப்பிக் கொண்டுஅங்கே வந்துசேர்ந்தபோது, குழப்பத்தோடு முன்னால் வந்தனர்...
நில்லுங்கள்...மேலே செல்ல அனுமதி கிடையாது...


வேனிலிருந்து இருஉருவங்கள் இறங்கி அவர்களை நோக்கிபாய்ந்தோடி வந்தன...
ஏய்...என்ன இதெல்லாம்?


கண்ட்ரோல் கட்டிடத்திலிருந்த இரண்டு நபர்களும் திரும்பி உள்ளேஓட யத்தனித்தனர். ஆனால் —
டெலிபோனில்...
நடக்காது
டுமீல்!
ணங்!
அந்த திடீர் சம்பவம் தோற்றுவித்த அதிர்ச்சியில் நான்காவது நபர் செயலிழந்து உறைந்து போனான்
...அநியாயமாக கொன்று விட்டீர்களே — ஐயோ...
நாங்கள் சும்மா வேடிக்கைக்காக இங்கே வர-வில்லை என்று உனக்கு புரிந்-தால் சரிதான்...
கோர்பெட்டும், டக்காலும் காரணத்-தோடு கதவைநோக்கி சென்றார்கள் ..
நீஇங்கேநின்றுகண்-காணித்துக்கொள் பாங்க்ஸ். மிச்சத்தை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!


சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கியாதலால் அதன் முழக்கம் உள்ளே பணியில் ஈடுபட்டிருந்த மற்ற இரு ஊழியர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை...
இருவரும் கைகளை உயர்த்துங்கள்...! முரண்டு பண்ணாமலிருந்தால் உங்களுக்கு எந்த கஷ்டமும் ஏற்படாது!


நீர்த்தேக்கத்தை வசப்படுத்தும் திட்டம் முழு வெற்றி! வேனில் இருந்த ரேடியோவை இயக்கினான் கோர்பெட்.
திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக. முடிந்து விட்டது— இறங்கி வரலாம்...


ஹெலிகாப்டரை கர்னலே ஓட்டி வந்தார்...
அதையடுத்து, இராணுவ நுட்பத்தோடு வெடிகுண்டுகளை பொருத்துவது உள்பட அனைத்து ஏற்பாடுகளும் மளமளவென்று செய்து முடிக்கப் பட்டன ..
எல்லாம் ரெடி ...கர்னல்!
வெரிகுட்! நாம் அனுப்பிய அச்சுறுத்தலும் இந்நேரம் மேயரின் கைக்கு போய்ச் சேர்ந்திருக்கும்...


கவுன்ஸில் சேம்பரினுள் வழக்கமாக நிலவும் பூரண அமைதிக்கு பங்கம் விளைவிக்க வந்து விழுந்த வெடிகுண்டாக, அந்த அச்சுறுத்தல் கடிதம் சென்றடைந்தது...
நான் போலீஸாருக்கு தகவல் அனுப்பியிருக்கிறேன்ஸார்...! கமிஷனர்விரைந்து வந்து கொண்டிருக்கிருர் —
அது வேடிக்கைக்காக எழுதப்பட்ட போலி மிரட்டல் கடிதம் அல்ல என்று உறுதியாக எடுத்துரைத்தார் போலீஸ் கமிஷனர்...
அந்த பழைய கும்பலிடமிருந்துதான் இது வந்திருக்கக் கூடும்... அவர்கள் ஒன்றும் கோமாளிகளல்ல...ஏற்கெனவே, என் ஆட்கள் இருவரை கொன்றுவிட்டிருக்கிருர்கள்...!
ஆனலும் .. வந்து— இது... அரக்கத்தனமானது ஸார்!


ரிலிருந்து மக்களை வெளியேற்ற அவகாசம் இல்லையே ஸார்... அவர்களுடைய கோரிக்கைக்கு இன்று மதியத்திற்குள் நாம் இணங்காவிடில் நீர்த்தேக்கத்-தை தகர்த்து விடுவார்கள்— விளைவு...விபரீதமாக இருக்கும்!
இராணுவத்தை அழைப்பது தான் நல்லது...
நகர் பொதுப்பணித்துறை அலுவலகத்தில் அந்த பிராந்தியத்தின் வரைபடம் ஆராயப்பட்டது ..
இதோ... இங்கே இருக்-கிறது-நீர்த் தேக்கம்...!
ஹேய்! இந்த வரை படத்தை கர்னல் கார்த்தின் வீட்டில் அவருடைய யுத்த அறையில்பார்த்தேன்!
என்ன ஏதேதோ பிதற்றுகிறாய்... ஜோன்ஸ்?



கர்னலின் வீட்டில் தான் கண்டதைஜோன்ஸ் விளக்கமாக எடுத்துரைத்ததை தொடர்ந்து, அவர்கள் மின்னல் வேகத்தில் அங்கே போய்ச் சேர்ந்தனர்...
அவர்கள் கொலைக்கும் அஞ்சாத வெறியர்கள்... கையில் பிஸ்டல் தயாராக இருக்கட்டும்!
யெஸ்...ஸார்!
POLICE




கதவை தட்டியதற்கு பதிலேதும் இல்லாமற் போகவேதகர்த்துக்கொண்டுஉட்புகுந்தார்கள்...
உள்ளே யாருமேஇல்லை ...ஸார்!
இதோ இருக்கிறது —கர்னலின் 'யுத்த அறை'... இங்கே-தான் நான் அந்த வரைபடத்தை பார்த்-ததாக ஞாபகம்!


ஜோன்ஸின்எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. அங்கே அவர்கள் எதிர்பார்த்து வந்ததை விட நிறைய தடையங்கள் அகப்பட்டன...
அடக்கடவுளே...! அதே நீர்த்-தேக்கத்தின் 'மாதிரி'
WAR R
யுத்தம் முடிந்து விட்டதற்காக வருத்தப்பட்டி-ருக்கக் கூடிய அந்த முன்னாள் கர்னல், தன் கீழ் பணியாற்றிய கோணல்புத்தி ஆட்களை வேலைக்கு அமர்-த்திக் கொண்டிருக்கக்கூடும்...
...இராணுவ நுட்பத்தோடு அனைத்தையும் அவர் திட்டம் வகுத்திருக்-கிறார்...!
கமிஷனரின் முகம் இறுகியது...
இராணுவ முறையில் திட்டமிடப் பட்டுள்ள விஷமச் செயல் வெற்றி பெறுவது உறுதி... துருப்புச் சீட்டு இப்போது கர்னலின் வசம்—
நான் அப்படி நினைக்கவில்லை ஸார்...
கர்னல் வசம் நிச்சயம் ஆயுதங்கள் இருக்கும்... இந்நிலையில்இராணு-வமே சென்று அவ-ரோடு மோதினாலும், சரணடையுமுன் நீர்த்-தேக்கத்தை அவர் தகர்ப்பதைத் தடுக்க இயலாமற் போகும்!
ஒரு விஷயம் அவர் கவனத்துக்கு வராமல் போயிருக்கும் என்பது என் கணிப்பு...



கையில் கிடைக்கும் எந்த ஒரு சிறு துரும்பையும் பற்றிக் கொண்டு கரையேற துடிக்கும் அவல நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தார் கமிஷனர்...
என்ன அது — சொல்..ஜோன்ஸ்!
யாராவது தண்ணீருக்கு அடியில் நீந்தி அவர்களை நெருங்கி விட முடியும்- என்ற உண்மை...
WAR RO
நீரினடியில் நீந்திச் செல்ல ஏற்கனவே பயின்றிருக்கிறேன் ...அவர்கள் கண்ணில் படாமலே நெருங்கிச் சென்றுவிட முடியும் என்றால்...அதன் பிறகு...
அந்த உயர் அதிகாரியின் முகத்தில் தெளிவு ஏற்பட்டது.
பிரமாதமான யோசனை...!எதிரி-களின் நாசவேலையை முறியடித்துவிட முடியும் என்ற நம்-பிக்கை எனக்கு வந்துவிட்டது!


“அதன் பிறகு நான்கு தடியர்களை சமாளித்து விட்டால் அசம்பாவிதத்தைதவிர்த்துவிடலாம்...” உடனே நடவடிக்கைகள் துரிதமாக மேற் கொள்ளப்பட்டன.
ஏதாவது தென்படுகிறதா... ஜோ?
மத்தியிலிருக்கும் மேடைமீது மெஷின் துப்பாக்கி ஒன்று நிலைப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிகிறது...!
POLICE


அந்த மெஷின் துப்பாக்கியின் பின்னே பாங்க்ஸ் தயாராக நின்று கொண்டிருந்தான்...
சும்மா அவர்களை பயமுறுத்திவிரட்டு — நாம்சுமமா வேடிக்கைக்காக அந்த கடிதத்தை அனுப்பவில்லை என்றசேதியை அவர்கள் போய் எடுத்துரைக்கட்டும்!
ரட்-டட்-டட்!


போலீஸ் கார் சட்டென்று பின்வாங்கிவிரைந்தோடி மறைந்த சற்று நேரத்திற்கெல்லாம், அங்கே நிலவிய அமைதியை கிழித்துக்கொண்டு வேறொரு பேரொலி எதிரொலிக்கத் தொடங்கியது,
சரி...ஸார்!
க்ர்ர்ர்...
ஹெலிகாப்டர் ஒன்று ...!அது நம்மை நெருங்கி வராமல் தடுக்க வேண்டும்!


நீர்ப்பரப்பின்மேல் சுமார் 100 அடி உயரத்தில் வட்டமடித்தது அந்த ஹெலிகாப்டர்...
POLICE
டுமீல்!


சட்டென்று பலாத்காரத்தில் இறங்கிவிட்டார்களே—குறிவைப்பதிலும் அவர்களுக்கு சிரமம் இருப்பதாக தெரியவில்லை!
டப்!
டப்!
ஜோன்ஸ்நீரில் இறங்க தயாரானபோது கீழ்த்திசையில் சூரியன் மேலே வந்துவிட்டிருந்தது...
கெடுவை ஒருமணி நேரம் தள்ளிப்போட வேண்டுகோள் விடுப்பதோடு, நீ அணையை நெருங்கும் போது அவர்களுடைய கவனத்தை திசை திருப்பும் நோக்கத்தோடு, மேயர் கர்னலை சந்திக்கச்சென்றிருக்கிறார்...
பிரமாதமான யோசனை அது ...ஸார்! நானும் மிகக் கவனமாக நடந்து கொள்வேன்!


குட் லக்... ஜோன்ஸ்அந்த வெடி-குண்டுகளைசெயலிழக்-கச் செய்யும் உன் முயற்சியின் வெற்றி தோல்வியை பொறுத்துத்தான், வின்செஸ்டரிலுள்ள ஆயிரக்கணக்கான உயிர்களின் தலைவிதி இருக்கிறது என்பதை மறந்துவிடாதே!
மறக்கக்கூடிய சமாசாரமா...?
மறுகணம் நீரினுள் மறைந்து விட்டார் ஜோன்ஸ்...
மேலே கண்ணாடிபோல் அசைவற்றுக் கிடந்த நீர்ப்பரப்பில் எவ்வித சலனமும் ஏற்படவில்லை—
இதற்கிடையே, சமாதான கொடியோடு சமரச பேச்சுவார்த்தைக்காக, அணைக்கட்டை நெருங்கி வந்தார் மேயர்...
போதும் ...அங்கேயே நில்லுங்கள் மேயர்! ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் நீங்கள் வந்திருந்தால் வெறும் கால விரையம்தான் விளையும்— எங்கே, நான் கேட்ட பணம்?
உன் நிபந்தனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் பணத்தை சேகரிக்க கூடுத-லாக குறைந்த பட்சம் ஒரு மணிநேர அவகாசம் தேவைப்-படுகிறது...


வேறுவழியின்றி ஆத்திரத்தோடு கர்னல் அந்த கோரிக்கைக்கு இணங்கிய வேளையில் ஜான்ஸ் அணையின் அடிப்-பகுதியை நெருங்கி விட்டார்.


திடீரென்று நீரோட்டம் தன்னை இழுப்பதை உணர்ந்து திடுக்கிட்டுப் போனார்.
இது என்ன ...விபரீதம்?


பற்றிக்கொள்ள ஏதாவது அகப்படாதா என்று விரல்கள் பரபரப்பாக இங்குமங்கும் துளாவின ...நீர் வெளியேறும் துவாரத்தின்வழியே வெளியே தள்ளப்பட்டார் ஜோன்ஸ்.


இருண்ட பகுதியிலிருந்து வெளிச்சத்துக்கு தள்ளப்பட்ட அவருக்கு பற்றிக்கொள்ள ஒரு பிடி கிடைத்தது அவரது அதிர்ஷ்டமே!


சமாளித்து எழுந்து கொண்ட ஜோன்ஸ்நேர் மேலே வெகு அண்மையில், கர்னலின் சகாக்கள் பேசிக் கொண்டிருப்பதை கேட்டார்...
ஒரே வேட்டையில் மில்லியன் பவுண்டுகள்...! அப்பப்பா... கர்னல் தந்திரத்தில் குள்ளநரிதான்— சந்தேகமேயில்லை!
அவர் அசகாய சூரர்தான்...! ஆனால் பணம் வந்த பின்னரும் நாம் தப்பிச்செல்ல வசதியாக இந்த அணையை தகர்த்து விடுவது என்ற அவருடைய முடிவைத்தான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை!


நினைத்ததைவிட நிலைமை படுபயங்கரமாக இருக்கும் உண்மை ஜோன்சுக்கு தெரியவந்தது, எதற்கும் துணிந்து விட்டார்...
ஆனாலும் நீ மற்றவர்களுக்காக ரொம்பவும்தான் பச்சாதாபப்படுகிறாய் .. பாங்க்ஸ்!
முதலில் இந்த இரண்டு பேர்களையும் வீழ்த்த வேண்டும்


மறுகணம்-தன்னை தாக்கியது எது என்றே பாங்க்ஸுக்கு தெரியாது! -மயங்கிச் சரிந்தான்...
ஹே...யா...யார்ர்—நீ!
கும்!
ஆ...


ணங்!!
திடீரென்று
எப்படி இங்கே
வந்து முளைத்-
தாயோ-தெரிய-
வில்லை...
எப்படியிருந்த
போதிலும்...


தன் துப்பாக்கியை திருப்பிப் பிடிக்கக்கூட அவகாசமில்லை என்று உணர்ந்த ஜோன்ஸ் மெஷின் கன்னை நோக்கி பாய்ந்தார்...
நீ இங்கிருந்து உயிரோடு திரும்பப் போவ-தில்லை . நிச்ச-யமாக!
மெஷின் கன்னை சுழற்றினர் எலியட்...
சத்!
ஆஆஆ......


செஞ்சுரியன் டாங்க் ஒன்று அங்கே வந்து கொண்டிருந்தது...
இத்தனை அலட்டல் தேவைதானா...?
நமக்கு உதவ டாங்க் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்கள்... பார்!
நெருங்கி வந்துவிட்ட பின்னரும், அந்த முரட்டு வாகனம் நிற்காமல் தொடர்ந்து முன்னேறியது!
...ஹே... என்ன இது கண்மூடித்-தனமாக—
டமால்!


அந்த அலறல் கர்னலுக்கு கேட்டிருக்க வேண்டும். ஜோன்ஸ் ஏணி வழியாக இறங்கி வந்தபோது—
டும்!


மறுபடியும் சுட்டார் கர்னல். இம்முறை குறி தவறவில்லை...
டுமீல்!
அஹ்ற...!


தன் தோளில் ஏற்பட்ட காயத்தை அறவே மறந்தவராக புலிப் பாய்ச்சலாக கார்த்தை நோக்கிப் பாய்ந்தார் ஜோன்ஸ்...
பேசாமல் சரணடைந்து விடுவதுதான் புத்திசாலித்தனம்... கர்னல்!
ஆ ஆ வ்வ்...!


ஆனால், கர்னலின் எஃகுப் போன்ற முஷ்டி ஜோன்ஸின் காயத்தை குறிவைத்து மின்னல் வேகத்தில் இறங்கியது...
ஆ ஆ...!
சரணடைய வேண்டியது நானல்ல— நீதான்...!


வலி தாளாது மயங்கிச் சரிந்த ஜோன்ஸை உறுத்துப் பார்த்தார் கர்னல்...
என்னைத் தடுத்து நிறுத்தரொம்பவும் துணிச்சலான முயற்சிதான்...! இப்போதுநான் வெடிகுண்டை இயக்கி, அணையை தகர்க்கப் போகிறேன்! தளபதிகளின் பெயர்கள் எல்லாம் காலப் போக்கில் மறந்து போனாலும் கர்னல் கார்த்தின் பெயர்மட்டும் காலம்காலமாய் நினைவில் நிற்கும்...!
சில நிமிடங்களுக்குப் பின் ஜோன்ஸ் மயக்கம் தெளிந்து எழுந்தபோதுகர்னல் போய்விட்டிருந்தார்...
எங்கே போய்த் தொலைந்தான்... அந்தக் கிராதகன்?
வெடிகுண்டை இயக்கப்போகிறதாக சொன்னான். வெடிகுண்டை கட்டுப்பாட்டு அறையினுள் பொருத்தியிருக்கிறார்கள்...!


தட்டுத் தடுமாறி எழுந்த ஜோன்ஸி கதவை திறக்க முயன்றார்—முடியவில்லை...
உரிய தருணத்தில் போய் அவனை தடுத்து நிறுத்த வழியில்லை. ஆனால் வேறொரு முயற்சியை நீ கையாண்டு பார்க்கலாம்...!
அந்தச் சக்கரத்தை வலப்பக்கமாக சுழற்று-முடிந்த அளவுக்கு முழுவதுமாக! விளக்கம் கேட்க இது தருணமல்ல!
அந்த சக்கரத்தை நோக்கிப் பாய்ந்தார் ஜோன்ஸ்...


அவர்களுக்கு சுமார் 50 அடி கீழே—
படைவீரனுக்கு இரண்டு அடிப்படை ஞானம் இருக்க வேண்டும்— ஒன்று...எப்படி எதிரிகளோடு பொருதுவது...இரண்டு-எப்படி மரணத்தை எதிர் கொள்வது...!
கட்டுப்பாட்டு அறையினுள் நுழைந்த கர்னலின் முகத்தில் கலவரத்தின் ரேகையோ, விரல்களில் நடுக்கமோ கிடையாது...
வெடிகுண்டை தூண்டி வெடிக்கச் செய்யும் கருவியை இயக்கிவிட்டால் போதும்-அடுத்த 30 செகண்டுகளில்... ...எல்லாமே முடிந்துவிடும்!
DANGER


ஆனால், திடீரென்று ...
ஓ...நோ—
தோற்று
விட்டேன்...!
பதினைந்தே வினாடிகளில் கட்டுப்பாட்டு
அறையின் கூரைவரை உயர்ந்துவிட்டது
நீர்மட்டம்... ஆயிரக் கணக்கான உயிர்களை
அச்சுறுத்திக் கொண்டிருந்த ஆபத்தும்,
கர்னலோடு சேர்ந்து ஒழிந்தது ...
அந்த சக்கரம் ஒரு
அவசரகால
ஏற்பாடு...அதைபயன்-
படுத்த வேண்டிய
நெருக்கடி இன்றைக்குத்
தான் முதல் முறையாக
ஏற்பட்டது!
ஒருவழியாக
அணைக்கட்டு அழி-
விலிருந்துகாப்பாற்
றப்பட்டு விட்டது...

சலனமற்றுக் கிடந்த நீர்த்தேக்கத்தை வெறித்த-
வாறு, சிந்தனேயோடு நின்று கொண்டிருந்தார்.





லயன் புக் ஹவுஸ், நிறுவனத்தின் சார்பாக "மினி லயன்"
வெளியிடுபவரும், ஆசிரியரும் : S. விஜயன். தபால் முகவரி :
லயன் புக் ஹவுஸ், த. பெ: 55, சிவகாசி - 626 123.
ஃபோன்: 21159.

வெளியீடு எண்: 1.



விச்சு & கிச்சு
ஹேய்! கிச்சு, சனிக்கிழமை விளையாடவிருக்கும் கிரிக்கெட் குழுவிலிருந்து நீ நீக்கப்பட்டிருக்கிறாய்! உனக்குப் பதிலாக நான் ஆடயிருக்கிறேன்!
என்னது?
ALL ABOUT SPIN
இந்த சுண்டைக்காய்க்கு ஏதாவது சின்ன விபத்து ஏற்பட்டதானால் திரும்பவும் நான்குழுவினுள் நுழைய வாய்ப்பிருக்கிறது! ஹெ! ஹெ!
கொஞ்சம் பயிற்சி செய்ய வேண்டியது தான்!
விச்சு கண்ணா! எங்கே இந்த காட்சைப் பிடி பார்க்கலாம்!


என்ன சொன்னுய் கிச்சு?
இப்படி சிறு பிள்ளைத்தன மாய் ஏதாவது செய்து வருவதே உன்வேலை யாகிவிட்டது கிச்சு!
SOAP
உன்னை விட்டேனு பார்! யானைக்கும் அடி சறுக்கும்!
விச்சு இங்கே உடனே வாயேன்! அவசரம்!
SOAP



எ-என்ன விஷயம்?
SOAP
ஹா! ஹா! ஹா!
SOAP
ஊ - ஊப்ஸ்!
அணித் தலைவர் இப்பொழுது தான் போன் செய்தார் கிச்சு! இன்று அவருக்கு உடல்நலம் சரியில்லாததால் உன்னை திரும்பவும் அணியில் சேர்ந்து கொள்ளச் சொன்னார்! ஆனால் — பாவம்!
ஐ-ஐயோ!


சூப்பர் பைலட்
டைகர்
தோன்றும்
ஆர்டிக் நரகம்!
மினி
பயன்
ரூ. 1/-
விரைவில் வருகிறது!